தேர்ச்சி பெறாதவர்கள், எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்காதவர்களுக்கு இன்னும் பல வாய்ப்புகளை காலம் வழங்கத்தான் போகிறது!

# பெற்றோர்கள் - பிள்ளைகள் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு நல்ல நண்பனாகத் துணை நில்லுங்கள்!

## ‘பிளஸ் டூ’ முடிவுகள் வெளியான நிலையில் – முதல்வர் வேண்டுகோள்!



**சென்னை, மே. 9-**

**பிளஸ் டூ தேர்வு முடிவுகள் வெளியான நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “பெற்றோர்கள் - பிள்ளைகள் மீது எந்த அழுத்தத்தையும் ஏற்படுத்தாமல், அவர்களது அடுத்த கட்ட வளர்ச்சிக்கு ஒரு நல்ல நண்பனாகத் துணை நில்லுங்கள்!” என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

Plus Two தேர்வு முடிவுகள் இன்னும் சற்று நேரத்தில் வெளியாகின்றன. Result எதுவானாலும் அதுவே முடிவல்ல என்பதை மாணவர்களும், பெற்றோர்களும் உணர வேண்டும்.

தேர்ச்சி பெறாதவர்கள், எதிர்பார்த்த மதிப்பெண் கிடைக்காதவர்களுக்கு இன்னும் பல வாய்ப்புகளைக் காலம் வழங்கத்தான் போகிறது. இது உங்கள் வாழ்வின் தொடக்கம் மட்டுமே. இனிதான் உங்களின் சிறப்பான phase அமையவுள்ளது என்ற positive outlookஉடன் இந்தத் தேர்வு முடிவுகளை அணுகுங்கள்.

பெற்றோர்களும் பிள்ளைகள் மீது எந்த அழுத்தத்தையும் ஏற்படுத்தாமல், அவர்களது அடுத்தகட்ட வளர்ச்சிக்கு ஒரு நல்ல நண்பனாகத் துணைநில்லுங்கள்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ஒருங்கிணைந்த பஸ் நிலையம் திறப்பு விழா; அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா :

# திருச்சி விழாவில் தி.மு.க.வினர் திரளாக பங்கேற்க வேண்டும்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



திருச்சி மே 9-

திருச்சியில் இன்று நடக்கும் ஒருங்கிணைந்த பஸ் நிலையம் திறப்பு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் தி.மு.க.வினர் திரளாக பங்கேற்க வேண்டும் என்று அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அழைப்பு விடுத்துள்ளார்.

திருச்சி தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருச்சி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் திறப்பு விழா, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நாளை நடக்கிறது. இதில் திமுக தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு ஒருங்கிணைந்த பஸ் நிலையத்தை திறந்து வைத்து, அரசு விழாவில் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றுகிறார். இந்த விழாவில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, வட்ட, வார்டு கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அனைத்து நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் தொண்டர்கள் பெரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

நாகை மாவட்டத்தில் ஒன்றிய, நகரத்தில்

# நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!



*நாகை, மே 9 -*

*நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என். கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.*

*இந்திய பொருளாதார வளர்ச்சி 6.5 விழுக்காடு என்றால் தமிழ்நாடு பொருளாளதார வளர்ச்சி 9.69 விழுக்காடு, தமிழ்நாட்டின் தனி வருமானம் 3.58 என்றும், உயர்கல்விச் சேர்க்கை விகிதம் 47 விழுக்காடு, மக்களைத் தேடி மருத்துவம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மகளிர் விடியல் பயண திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், நான் முதல்வன்திட்டம், இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், என தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாட்டு மக்களுக்காக இன்னும் பல்வேறு திட்டங்களை என திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர பகுதியில் கழகத்தலைவர், திராவிட மாடல் நாயகர், தமிழ்நாடு முதல மைச்சர் தளபதி அவாகளின் தலைமையிலான கழக அரசின் நான்கு ஆண்டுகளில் எண்ணற்ற திட்டங்களை தந்து நாடு போற்றும் நான்காண்டு , தொடரட்டும் இது பல்லாண்டு, கழக அரசின் நான்காண்டுகளின் சாதனை விளக்க பொது கூட்டம் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கீழ் கண்ட விவரப்படி நடைபெற உள்ளது.*


*இந்த பொதுக் கூட்டம் சிறப்பாகவும், எழுச்சியுடன் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் நடத்திட வேண்டும். அதன் படி 9.5.2025 கீழ்வேளூர் வடக்கு ஒன்றியம் தலைமைக் கழகப் பேச்சாளர் சோம.செந்தமிழ்செல்வன், திருமருகல் தெற்கு ஒன்றியம் தலைமைக் கழகப் பேச்சாளர் ஆரூர் ஜோதி, வேதாரண்யம் மேற்கு ஒன்றியம் தலைமைக் கழகப் பேச்சாளர் மு.கருணாகரன், 10.5.2025 கீழ்வேளூர் தெற்கு ஒன்றியம் தலைமைக் கழகப் பேச்சாளர் தெ.தியாக ராஜன், நாகை வடக்கு ஒன்றியம் தலைமைக் கழகப் பேச்சாளர் மு.கருணாகரன், தலைஞாயிறு ஒன்றியம தலைமைக் கழகப் பேச்சாளர் கவிஞர் பெர்னாட்ஷா, 11.5.2025 கீழையூர் கிழக்கு ஒன்றியம் தலைமைக் கழகப் பேச்சாளர் வை.பரிதிச்செல்வன், இளம் பேச்சாளர் இரா. பிரித்தி, நாகை நகரம் தலைமைக் கழகப் பேச்சாளர் ஆரூர்.ஜோதி, இளம் பேச்சாளர் ர.அகிலா, வேதாரண்யம் நகரம் தலைமைக் கழகப் பேச்சாளர் கவிஞர் பெர்னாட்ஷா, இளம் பேச்சாளர் பா. அருண்குமார், கீழையூர் மேற்கு ஒன்றியம் தலைமைக் கழகப் பேச்சாளர் ஆரூர் ஜோதி, நாகூர் நகரம் தலைமைக் கழகப் பேச்சாளர் கு.வாஞ்சி நாதன், இளம் பேச்சாளர் சோ.கார்த்தி, 12.5.2025 நாகை தெற்கு ஒன்றியம் தலைமைக் கழகப் பேச்சாளர் வை.பரிதிச்செல்வன், திருமருகல் வடக்கு ஒன்றியம் தலைமைக் கழகப் பேச்சாளர் மு.கருணாகரன், சேதாரண்யம் கிழக்கு ஒன்றியம் தலைமைக் கழகப் பேச்சாளர் ஆரூர் ஜோதி ஆகியோர் சிறபுரையாற்றுகிறார்கள்.*

*கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச்செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளி முன்னாள் பிரதிநிதிகள், நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத்தலைர், உறுப்பினர்கள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் கூறியுள்ளார்.*

திருப்பூர் மத்திய மாவட்டம் முழுவதும் “நாடு போற்றும் நான்காண்டு”

# தொடரட்டும் இது பல்லாண்டு! கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!



*திருப்பூர், மே 9 -*

*சென்னை அண்ணா அறிவாலயத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தினை செயல்படுத்துகிற வகையில் திருப்பூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதிகளில், கீழ்க்காணும் இடங்களில் “நாடு போற்றும் நான்காண்டு” தொடரட்டும் இது பல்லாண்டு!” கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளது.*

*அதன் விவரங்கள் வருமாறு :*

*திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி, தெற்கு மாநகரத்திற்குட்பட்ட வாலிபாளையம் பகுதி, கருவம்பாளையம் பகுதி, நல்லூர் பகுதிகளில் தெற்கு மாநகர செயலாளர் டிகேடி மு.நாகராசன், பகுதி செயலாளர்கள் மு.க உசேன், மியாமி ஆ.அய்யப்பன், மேங்கோ அ.பழனிசாமி ஆகியோர் ஏற்பாட்டில் நாளை (10.05.2025- சனிகிழமை) வார்டு எண் : 34க்குட்பட்ட பாளையக்காடு பகுதியில் தலைமை கழக பேச்சாளர் மானூர் புகழேந்தி, 11.05.2025 ஞாயிறுக்கிழமை அன்று வார்டு எண் : 37க்குட்பட்ட இராயபுரம் ரவுண்டானா அருகில் தலைமை கழக பேச்சாளர் துடியலூர் எ.என்.காளிச்சாமி, 12.05.2025 திங்கட்கிழமை அன்று நல்லூர் பகுதி, வார்டு எண் : 49க்குட்பட்ட சுப்பிரமணியம் ட்நகரில் துடியலூர் எ.என். காளிச்சாமி, திருப்பூர் மத்திய மாவட்டம், பல்லடம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்லடம் மேற்கு ஒன்றியம், பொங்கலூர் கிழக்கு ஒன்றியம், பொங்கலூர் மேற்கு ஒன்றியம், திருப்பூர் தெற்கு ஒன்றியம், பல்லடம் கிழக்கு ஒன்றியம், ஆண்டிபாளையம் பகுதி, முத்தணம்பாளையம் பகுதிகளில் தெற்கு மாநகர செயலாளர் டிகேடி மு.நாகராசன், மாவட்ட துணை செயலாளர், வழக்கறிஞர் எஸ்.குமார், ஒன்றிய செயலாளர்கள் சு. கிருஷ்ணமூர்த்தி, சா.பாலுசாமி, பெ.அசோகன், பி.விஸ்வலிங்கசாமி, நா.சோமசுந்தரம், பகுதி செயலாளர்கள் வைஸ் பி.முருகசாமி, அ.கோவிந்தராஜ், எஸ்.என்.குமார், பல்லடம் நகர கழக செயலாளர் ந.ராஜேந்திரகுமார் ஆகியோர் ஏற்பாட்டில் 09.05.2025 வெள்ளிக்கிழமை இன்று காமநாயக்கன் பாளையத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் சஹா விக்னேஷ், பொதுக் குழு உறுப்பினர் எல்.எம். மஸ்ஊது,*

*09.05.2025 வெள்ளிக்கிழமை இன்று கொடுவாய் பஸ் நிலையம் அருகில் தலைமைக் கழகப் பேச்சாளர் ஈரோடு இலையகோபால், திருப்பூர் மாநகராட்சி 3ம் மண்டலத் தலைவர், திருப்பூர் வடக்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சி.கோவிந்தசாமி, 09.05.2025 வெள்ளிக்கிழமை இன்று வார்டு எண் : 40 க்குட்பட்ட இடுவம்பாளையம், காமாட்சியம்மன் கோவில் திடலில் தலைமை கழக பேச்சாளர் இடிமுரசு லட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர் மு.நாச்சிமுத்து, மாவட்டத் துணைச் செயலாளர்*

*ஜி.கே.நந்தினி, 10.05.2025 சனிக்கிழமை நாளை புத்தரச்சலில் தலைமைக் கழக பேச்சாளர் தென்னை சிவா, பொதுக் குழு உறுப்பினர் மு.நாச்சி முத்து, 10.05.2025 சனிக்கிழமை அன்று வார்டு எண் : 57 க்குட்பட்ட பழவஞ்சி பாளையத்தில் தலைமை கழக பேச்சாளர் கோவை எச்.வசந்தி, பொதுக்குழு உறுப்பினர் எல்.எம்.மஸ்ஊது, 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று வார்டு எண் : 59 க்குட்பட்ட செவந்தாம்பாளையத்தில் தலைமை கழக பேச்சாளர் இடிமுரசு லட்சுமணன், திருப்பூர் மாநகராட்சி 3ம் மண்டலத்தலைவர், திருப்பூர் வடக்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சி.கோவிந்தசாமி, 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இடுவாய் ரவுண்டானா அருகில் தலைமை கழக பேச்சாளர் குரும்பை கனகராஜ், பொதுக்குழு உறுப்பினர் எல்.எம்.மஸ்ஊது, 12.05.2025 திங்கட்கிழமை அன்று அறிவொளி நகரில் தலைமைக் கழக பேச்சாளர் தென்னை சிவா, திருப்பூர் மாநகராட்சி 3ம் மண்டலத்தலைவர், திருப்பூர் வடக்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சி. கோவிந்தசாமி, 12.05.2025 திங்கட்கிழமை அன்று பல்லடம் என்.ஜி சாலையில் தலைமை கழக பேச்சாளர் கோவை எச்.வசந்தி, பொதுக்குழு உறுப்பினர் எல்.எம்.மஸ்ஊது உள்ளிட்டோர் திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துக்கூறி உரையாற்றுகின்றனர்.*

*அதுசமயம், மேற்கண்ட பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக, வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி கழக, வட்டக் கழக, வார்டு கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள், தொண்டர்கள், (BLA2) பாகமுகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

சமூக நீதியின் சரித்திரப் பயணம் தொடரட்டும்!

# ‘திராவிட மாடல்’ அரசின் 5 ஆம் ஆண்டை ஆதித்தமிழர் பேரவை பெருமையோடு வரவேற்கிறது!

## இரா.அதியமான் அறிக்கை!



*சென்னை, மே 9 -*

*தமிழ்நாட்டில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு. கழக ஆட்சி கடந்த 4 ஆண்டுகள் நிறைவடைந்து ஐந்தாம் ஆண்டில் அடியெடுத்து வைத்து தலை நிமிர்ந்த வளர்ச்சித் திட்டங்களால் மீண்டும் அரியணையில் அமர வைக்கும் வாய்ப்பை மக்கள் வழங்கத் தயாராகி விட்டார்கள் என்பதை ஆதித்தமிழர் பேரவை பெருமையோடு வரவேற்கிறது என ஆதித் தமிழர் பேரவை தலைவர் இரா.அதியமான் தெரிவித்துள்ளார்.*

*இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-*

*தி.மு.கழக அரசு கடந்த நான்காண்டுகளில் மதிப்பிட்டுக் கூறும் அளவிற்கு பல்வேறு நலத் திட்டங்களையும் நிறைய மாற்றங்களையும் எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்களையும் தொலைநோக்கு பார்வையுடன் சிறப்பான முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.*

*இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக பெண்கள் அரசு பேருந்துகளில் இலவச பயணம் மேற்கொள்ள “மகளிர் விடியல் பேருந்துத் திட்டம்”. பெண்களுக்கு மாதம் ரூ.1000 வீதம் சுமார் 1.25 கோடி பெண்கள் பயனடையும் “கலைஞர் மகளிர் உரிமைத் தொகை” வழங்கும் வெற்றித் திட்டம்.*

*நாள்தோறும் 20.73 லட்சம் குழந்தைகள் பயன்பெறும் “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்” தினால் பள்ளி வருகை, கற்றல் ஆர்வம், வகுப்பறை கவனிப்பு, திறன்கள் மேம்பாடு. 90% குழந்தை களுக்கு பாட நினைவாற்றல், எழுத்து, வாசிப்பு, பேச்சுத் திறன் உயர்வு என மாணவர்கள் ஊக்குவிக்கப் பட்டிருக்கிறார்கள்.*

*அதே சமயம் திராவிட சித்தாந்தத்தால் தமிழ்நாட்டின் கல்வியில் தொழில் நுட்பத்தில் தொழிற்துறையில் மருத்துவத்துறையில் இன்று நாம் பெற்றிருக்கும் முன்னேற்றம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட முடியாத அளவிற்கு மிகுந்த முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பதை கடந்த நான்காண்டுகளில் நாம் அறிந்து கொள்ள முடிந்திருக்கிறது*

*சுயமரியாதையும் பகுத்தறிவையும் கூர்மைபடுத்தியிருக்கும் இவ்வரசு சாதி மத வேறுபாடுகளைக் கடந்து சகோதரத்துவம் சமதர்மம் என அர்ப்பணித்துக் கொண்டு எல்லோருக்கும் எல்லாம் என்று எல்லா வளர்ச்சித் திட்டங்களும் அனைத்து தரப்பு மக்களிடம் சேர்க்கும் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு 2026 லும் 200+ என்ற இலக்கைத் தொட்டு சமூக நீதியின் சரித்திரம் தொடரட்டும் என வாழ்த்துவதோடு அரசின் ஐந்தாம் ஆண்டு தொடக்கத்தை ஆதித்தமிழர் பேரவை மனதார வரவேற்கிறது என்பதை மகிழ்ச்சியோடு கூறிக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.*



இராமநாதபுரம் மாவட்டம் செவ்வூர் கிராமத்தில் அமைக்கப்பட உள்ள சாலை மற்றும் மேம்பாலம் பணி குறித்து மனுக்கள் குழு தலைவர் மற்றும் அரசு தலைமை கொறடா கா .ராமச்சந்திரன் ஆய்வு நடத்தினார். உடன் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஜோதி, சின்னப்பா,தமிழ் நாடு சட்டமன்ற பேரவை முதன்மை செயலாளர் , மாவட்ட ஆட்சியர் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஏ.மணி - ஏ.வந்தேமாதரம் - கழகத்தினர் பங்கேற்பு!

# சிக்கராயபுரம் - கொழுமணிவாக்கத்தில் நீர்மோர் பந்தல்!

## படப்பை ஆ.மனோகரன் - சரஸ்வதி மனோகரன் திறந்து வைத்தனர்!

*சென்னை, மே.9-*

*குன்றத்தூர் சிக்கராயபுரம் ஊராட்சியில் நகர் பகுதியில் தாகம் தீர்க்கும் நீர் மோர் பந்தல் திறப்பு விழாவினை காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவரும் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை மனோகரன் திறந்து வைத்து மக்களுக்கு நீர் மோர் தர்பூசணி பழச்சாறு ஆகியவற்றை வழங்கினார்.*

*இதில் குன்றத்தூர் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் எ.மணி, குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம், சிக்கராயபுரம் ஊராட்சி மன்ற தலைவர் சுமதி வைத்தீஸ்வரன், மாவட்ட பிரதிநிதி பரிமேலழகன், கிளைக் கழகச் செயலாளர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.*

*நிகழ்ச்சியில் கிளைக் கழகச் செயலாளர் வைத்தீஸ்வரன் நன்றி கூறினார்.*

*குன்றத்தூர் கொழுமணிவாக்கம் ஊராட்சியில் தாகம் தீர்க்கும் நீர்மோர் பந்தல் திறப்பு விழா நேற்று முன்தினம் காலை சுமார் 10.00 மணியளவில் குன்றத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன் நீர்மோர் பந்தலை திறந்து வைத்தார்.*

*இதில் குன்றத்தூர் மத்திய ஒன்றிய கழகப் பொறுப்பாளர் எ.மணி, பரிமேலழகன், வாசுகி, மகேஷ், இ. பாலாஜி, பிரகாஷ் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் ஷீலா தனசேகரன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.*

**நாகை மாவட்டத்தில் ஒன்றிய, நகரத்தில்**

**நான்காண்டு சாதனை விளக்கப்பொதுக்கூட்டம் !**

**மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை !**



| நாள் | ஒன்றியம்/நகரம் | பேச்சாளர் | இளம் பேச்சாளர் |
|---|---|---|---|
| 09/05/2025 | கீழ்வேளூர் வடக்கு | சோம.செந்தமிழ்செல்வன் | - |
| | திருமருகல் தெற்கு | ஆரூர் ஜோதி | - |
| | வேதை மேற்கு | மு.கருணாகரன் | - |
| 10/05/2025 | கீழ்வேளூர் தெற்கு | தெ.தியாகராஜன் | - |
| | நாகை வடக்கு | மு.கருணாகரன் | - |
| | தலைஞாயிறு | கவிஞர் பெர்னாட்ஷா | - |
| 11/05/2025 | கீழையூர் கிழக்கு | வை. பரிதிச்செல்வன் | இரா.பிரித்தி |
| | வேதை நகரம் | கவிஞர் பெர்னாட்ஷா | பா. அருண்குமார் |
| 12/05/2025 | நாகை தெற்கு | வை.பரிதிச்செல்வன் | - |
| | திருமருகல் வடக்கு | மு.கருணாகரன் | - |
| | வேதை கிழக்கு | ஆரூர் ஜோதி | - |
| 13/05/2025 | கீழையூர் மேற்கு | ஆரூர். ஜோதி | - |
| | நாகூர் நகரம் | கு. வாஞ்சிநாதன் | சே. கார்த்தி |
| | நாகை நகரம் | ஆரூர். ஜோதி | ர.அகிலா |

**என்.கௌதமன்**
**செயலாளர்,**
**நாகை மாவட்ட தி.மு.க**